பலத்த மழை: சென்னை மாநகர மக்களைப் பாதுகாக்க

முதலமைச்சர் இரவு முழுவதும் உறங்காமல் செயல்படுகிறார்!

வடசென்னையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.1- "சென்னை மாநகர மக்களை பாதுகாக்க முதலமைச்சர் இரவு முழுவதும் உறங்காமல் செயல்படுகிறார்" என்று இந்து - சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வட சென்னையில் மழையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடசென்னை பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று (30.11.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்கள் மழை நீர் வெளியேற்றும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு வடசென்னையை பொறுத்தளவில் மண்டலம்3,4,5 மற்றும் 6 ஆகிய பகுதிகளில் கொசஸ்தலை மழை நீர் வடிகால் அமைப்பு பணிக்காக சுமார் ரூ.2,450 கோடி ரூபாய் செலவில் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, சென்னையினுடைய சாலை நீளம் சுமார் 5,500 கிலோ மீட்டராக இருந்தாலும் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு சென்னையைச் சுற்றியுள்ள பழைய கால்வாய்களில் தண்ணீர் அதிக கொள்ளளவு வெளியேறும் வகையில் அகலப்படுத்தியும், புதிய கால்வாய்களை ஏற்படுத்திய வகையிலும் சுமார் 1,450 கோடி ரூபாய் இன்றைக்கு செலவிடப்பட்டுள்ளது.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (30.11.2023) கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காமராஜ் நகர் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவினை வழங்கினார்.

வடசென்னையில் தண்ணீர் தேங்காத நிலை!

வடசென்னையில் இருக்கின்ற முக்கிய கால்வாய்களான கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், கொடுங்கையூர் இணைப்பு கால்வாய். ஓட்டேரி நல்லா, கூவம் போன்ற ஆறுகளை தொடர்ந்து நீர்வளத்துறை மூலமாக ஆகாயத்தாமரை மற்றும் செடிகளை அகற்றுகின்ற பணி தொடர்ந்து மேற்கொண்ட காரணத்தினால் 60 ஆண்டு காலமாக பிரகாசம் சாலை, என். எஸ். சி போஸ் ரோடு, வால்டாக்ஸ் சாலை, பேப்பர் மில்ஸ் ரோடு போன்ற பல சாலைகளில் இன்றைக்கு 15 சென்டிமீட்டர் மழை பெய்தும் கூட ஒரு சிறு அளவு கூட தண்ணீர் தேங்காத நிலை காணப்பட்டது.

முதல்வரின் போர்க்கால நடவடிக்கை!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தின ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கனமழையால் பாதிக்கப்பட்ட தாழ்வான பகுதிகளை கண்டறிந்து அந்த இடங்களில் இருக்கின்ற தண்ணீரை அகற்றுதல், தடையில்லாத மின்சாரத்தை வழங்குதல், அப்பகுதிக்கு தேவையான உணவினை வழங்குதல் போன்ற அத்தியாவசிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தி இருக்கின்றார். இந்த மழையினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற இடங்களை கண்டறிந்து அலுவலர்கள் முகாமிட்டு எவ்விதமான நோய் தொற்றும் வராமல் இருப்பதற்கு மருத்துவ முகாம்களை நடத்திடவும், அந்த பகுதி மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் வழங்கிடவும் சிறப்பு ஏற்பாடுகளை செய்திட உத்தரவிட்டிருக்கின்றார்.

ஆகவே இந்த பருவ மழை வரும் நாட்களில் இன்னும் கனமழையாக கூடும் என்ற வானிலை அறிக்கையை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, நீர் தேங்கியிருக்கின்ற தாழ்வான பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் அரசுத்துறை அலுவலர்கள் ஒருபுறம் பணியாற்றினாலும், மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் ஒருபுறமும், திராவிட முன்னேற்ற கழகத்தைச் சார்ந்த நிர்வாகிகள் மறுபுறமும் போர்க்கால அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.

எப்படிப்பட்ட பெரு மழை வந்தாலும் சமாளிப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி தயாராக இருக்கின்றது. அளப்பறிய பணியை பற்றி குறிப்பிட வேண்டுமென்றால் நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் இரவும் முழுவதும் உறங்காமல் அவருக்கு வருகின்ற செய்திகள், தொலைக்காட்சிகளில் தண்ணீர் தேங்கி நிற்கின்ற பகுதிகள் என்று குறிப்பிடும் இடங்களுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களையும், என்னையும், மேயர் அவர்களையும் சென்று பார்வையிடச் சொல்லி இயக்கிக் கொண்டே இருந்தார். நேற்று இரவு யாருமே தூங்காமல் பணி செய்துள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 30.12.2021 அன்று சென்னை மாநகராட்சி பகுதியில் மழை பாதிப்புகளை பார்வையிட வருகை தந்த போது இடுப்பு அளவிற்கு தண்ணீர் நின்ற பகுதிகளில் கூட நேற்றைக்கு பெய்த கன மழையில் ஒரு சொட்டு தண்ணீர் கூட நிற்கவில்லை. இந்த மாற்றத்திற்கு காரணம் முதலமைச்சர் அவர்களின் செயல்பாடுகள் தான். ஆகவே சென்னை மாநகர மக்களை காப்பதில் நமது முதலமைச்சர் அவர்கள் அதிக அக்கறையோடு செயல்படுகிறார்கள். நாங்களும், அரசு அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து மழைப் பாதிப்பிலிருந்து மக்களை முழுவதுமாக பாதுகாப்போம் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டியளித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (30.11.2023) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவைச் செயலாளர் கி. சீனிவாசன் சந்தித்து, பணி நீட்டிப்பும், முதன்மைச் செயலாளராக பதவி உயர்வும் வழங்கியமைக்காக நன்றி தெரிவித்து வாழ்த்துப் பெற்றார்.

பத்திரப் பதிவுத்துறையில் - தேசிய அளவிலான

தகவல் தொழில்நுட்ப நிறுவன கருத்தரங்கம்!

அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 1- வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி பத்திரப்பதிவுத்துறையில், நவீன தொழில் நுட்ப மேம்பாடு - "ஸ்டார் 3.0 மென்பொருள் திட்டம்" குறித்த தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் கலந்து கொண்ட கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார்.

பதிவுத்துறையில் கணினி மயமாக்கல் என்கிற "ஸ்டார்" திட்டம் 6.2.2000 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் முன்னோடி திட்டமாக தொடங்கி வைக்கப்பட்டது. முதன்முதலில் 23 அலுவலகங்களில் தொடங்கப்பட்ட கணினிமயமாக்கல் திட்டம் பின்னர் படிப்படியாக அனைத்து பதிவு அலுவலகங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. நிர்வாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொதுமக்களிடம் எளிய அணுகுமுறை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு புதிய மேம்படுத்தப்பட்ட வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 என்ற மென்பொருள் தற்போது பயன்பாட்டில் உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் பதிவுத்துறையில் தனித்துவமான வசதிகளுடன், அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய இணையவழி பதிவை எளிமையாக்கும் விதமாக ஸ்டார் 3.0 என்னும் புதிய மென்பொருளில் செயற்கை நுண்ணறிவை கூடுமான வரை பயன்படுத்துதல், மனித தலையீடின்றி தானாகவே சேவைகளை அளித்தல், பொதுமக்கள் அலுவலகம் வராமலேயே சேவைகளை பெறுதல், தற்போதைய இணைய தளத்தை புதுப்பித்து எளிமையாக்கல், மென்பொருளை அதிவேகமாக இயங்கவைத்தல், அனைத்து நிலைகளிலும் புதிய வன்பொருள் வழங்குதல், கிளவுட் தொழில் நுட்பம், கைபேசி செயலி உள்ளிட்ட சேவைகள் தொடர்பான கருத்துக்களையும் அவர்தம் மென்பொருள் சார்ந்த தொழில் நுட்ப தீர்வுகளை எவ்வாறு ஸ்டார் 3.0 திட்டத்திற்கு வழங்கி மெருகேற்றலாம் என்பதை தெரிவிக்க கருத்தரங்கில் கலந்து கொண்ட தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, பத்திரப்பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் வி.நல்லசிவன், பதிவுத்துறை துணைத் தலைவர்கள் சேகர், அருள்சாமி, பதிவுத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தேசிய அளவிலான தகவல் தொழில் நுட்ப முன்னனி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமியின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்

எம்.ரமேஷின் புதல்வர் எம்.ஆர்.தனேஷ்வரன் - சி.சுவாதி திருமணம்!

மணவிழா வரவேற்பில் திருமதி சாந்தா ஸ்டாலின் கலந்துகொண்டு வாழ்த்தினார்!

சென்னை, டிச.1- தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்துறை அமைச்சர் சு. முத்துசாமியின் சிறப்பு நேர்முக உதவியாளர் எம்.ரமேஷின் புதல்வர் திருமண விழா, இன்று சென்னையில் நடைபெறுகிறது.

அமைச்சர்கள், அதிகாரிகள், கழக முன்னணியினர் பலரும் இம்மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இம்மணவிழா பற்றிய விவரம் வருமாறு:-

தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமியின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர் எம். ரமேஷ்-திருமதி ஏ.பி.உமா ஆகியோரின் புதல்வர் எம். ஆர்.தனேஷ்வரனுக் கும் - சென்னை ஏ.செழியன் திருமதி சி.கிருஷ்ண வேனி ஆகியோரின் புதல்வி சி.சுவாதிக்கும் திருமணம் இன்று (01.12.2023-வெள்ளிக் கிழமை) காலை 9.00 மணியளவில், சென்னை-கோபாலபுரம், அவ்வை சண்முகம் சாலையில் அமைந்துள்ள கீதாபவன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் - அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள், கழக முன்னணியினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

முன்னதாக-மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி, நேற்று (30.11.2023-வியாழக்கிழமை) மாலை சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருமதி சாந்தாஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

மேலும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோரும் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார்கள்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

திருவொற்றியூர் கிழக்கில் கழகக் கொடியேற்றி 1000 பேருக்கு மதிய உணவு!

மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்கினார்! தி.மு.தனியரசு ஏற்பாடு!

சென்னை, டிச. 1 - சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மாநில இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர், 1வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. கழகக் கொடி ஏற்றி 1000 பேருக்கு மதிய உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

இதில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ். கணேசன், மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஏ.ராஜ், பி.சாந்தி, பகுதி நிர்வாகிகள் ஆர்.சி.ஆசை தம்பி, எம்.வி.குமார், ஆர். எஸ்.சம்பத், கே.பிரபாவதி, ஆர்.குமரேசன்,

வட்ட செயலாளர்கள் த.கார்த்திகேயன், டி.சி. வி.மணிகண்டன், எம்.எல். சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குறுத்து சி.முனுசாமி, க.வீ.சதிஷ்குமார், கேபிள் டிவி எம்.ராஜா, மு.சிவக்குமார், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.பாஸ்கர், ஓய்.ரஜினி நந்தி, ஆர்.ரஜினிபாபு, டி.டி. எம்.பாபு, வி.பழனிவேல், பி.எஸ்.சைலஸ் ம.ஜெயராமன், கே.கார்த்திகேயன், ஆர்.திணேஷ்குமார், முருகா எஸ்.ஆறுமுகம், பா.கண்ணபிரான், சு.பரமானந்தம், இ. பாலசுப்பிரமணி, டி.என். முரளிமனோகரன், கே.மோகன், எஸ்.சிரிஷா, சி.டி.வீரப்பன்,

எம்.ராஜேந்திரன், வி.ஜி. எம்.பாலாஜி, பி.கணேஷ்குமார், ஜி.சுகுமார், எம்.எம். செந்தில், பூ.நந்தகுமார், சுகுந்தாமுனுசாமி, எஸ். குமார், பா.அரங்கநாதன், எம்.மாலதி, புஷ்பகலா, டி. பி.பாலா, இரா.பரசுராமன், அ.தயாளன், ஜி.செல்வதாஸ், இ.திருஞானம், அ. அருளநந்தம், கு.தமிழ்மணி, கே.முருகேசன், எம்.பிரேம் குமார், சி.சரவணன், இ. நவாஷ், ஜி.நடராஜன், ஆர். துரைராஜ், கோ.ரமேஷ், ஏ. சுப்பிரமணி, எஸ்.கன்னையன், எல்.கண்ணப்பன், ஜி. கே.அருள்தாஸ், எஸ்.சுரேஷ், சி.எஸ்.ஆர்.ஜெகன், வி.சந்திரன், டி. பால்ராஜ், டி.தமிழ்செல்வம், சே.ச.குமரன்,

டி.அன்புசெழியன், ஜி.எஸ்.மணி, எஸ்.மூர்த்தி, வை.செந்தில்வேல், என்.ரவிசந்திரன், எ.பழனி, கோ. செல்லபாண்டி, பி.பாலமுருகன், க.சோழன், டி.கண்ணன், எம்.வெங்கடேசன், தீபா, ஆர்.சந்திரசேகரன், நா.சி.கதிரவன், கோ. தயானந்தசுரேஸ், எ.ஆன்ரோஸ், கே.நிர்மல்குமார், ஜி.எம். வினோத்குமார், இ.சந்தோஷ், பி.சசிகுமார், ஜி. பாலகிருஷ்ணன், டி.என். செந்தில்குமார், கி.கருணாகரன், டி.ஜெகநாதன், தி.மு. சரவணன், எஸ்.தமிழ்வாணன், ஏ.ஜெயா, ஆர்.உமாமகேஸ்வரி, பி.தமிழரசி, டி.புவனேஸஷ்வரி, எஸ்.கதிஜாபீ, டி.வசந்த, சி.ரமேஷ், டி.பாபு, எம்.எஸ்.பாண்டியன், எம்.மணோகரன், ராஜன், பெருமாள், ஆர். லோகு, ஆர்.மதி, எம்.டேனியல், கே.ஆர்.சுரேஷ், என். அன்சலேகா, பி.எஸ்.தேன்மொழி, சி.எச்.மனோஜ்குமார், பி.பலராமன், எஸ். கே.நிதி, ஜி.பாலாஜி, ஜி.வெற்றிவேல், ஆட்டோ ரவி, குருமூர்த்தி, திருமூர்த்தி, விக்னேஷ், விக்னேஷ், லோகநாதன், கே. மோகன்ராஜ், எஸ்.கார்த்திராஜா, கலையரசன், சூரியராஜ், த.தீபக், முரசொலி அப்பு மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில்

தஞ்சையில் புதிதாக அரசுக் கட்டடங்கள்!

அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டினார்!

தஞ்சாவூர் , டிச.1 - தஞ்சாவூர் மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.22 கோடி 97 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்வேறு அரசுக் கட்டடம் மற்றும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்.

கழக இளைஞரணி செயலாளர் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தாளை முன்னிட்டு மனிதநேய உதயநாள் உதயம் 3. "இன்று நடுவோம் இலட்சியத்தை என்றும் காப்போம் கழகத்தை சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி இளைஞர்அணி சார்பில் பகுதி இளைஞர்அணி அமைப்பாளர் ம.ஜெகதீஸ்வரன் தலைமையில், 28.11 .2023 செவ்வாய்க்கிழமை அன்று 247 மர கன்றுகள் மற்றும் பாதுகாப்பு வலையத்துடன் நடுவப்பட்டது. இவ்விழாவிற்கு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே சேகர்பாபு முன்னிலையில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் விழாவை துவக்கி வைத்தனர். வில்லிவாக்கம் கிழக்கு பகுதி கழக செயலாளர் வே. வாசு, வில்லிவாக்கம் மேற்கு கழக பகுதி செயலாளர் கூ.பி ஜெயின், மாநில விளையாட்டு துணை செயலாளர் வே.கௌதமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணா மூர்த்தி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சு.சிவராசு மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், எஸ்.கல்யாணசுந்தரம், செ.இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), க.அன்பழகன் (கும்பகோணம்), ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு வட்டம், திருவையாறு தேர்வுநிலை பேரூராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், மூலதன மானிய நிதி திட்டத்தின்கீழ் ரூ. 2 கோடி மதிப்பிலான ஈ.வெ.ரா. காய்கறி மார்க்கெட் கட்டடம் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி ஏலமையத்தினையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1.5 கோடி மதிப்பிலான நவீன எரிவாயு தகன மேடை கட்டிடமும், ரூ. 20 இலட்சம் மதிப்பிலான "இளைஞர் திறன்வளர் மையம்" நூலகக் கட்டிடத்தினையும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி தாராசுரம் வை.கோவிந்தசாமி அரசு மேல்நிலை பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பிலான புதிய இரண்டு வகுப்பறைக் கட்டடமும், தாராசுரத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான புதிய தாராசுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க கட்டடமும், அறிஞர் அண்ணா மேல்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 44 இலட்சம் மதிப்பீட்டில் இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வகக் கட்டிடமும் மற்றும் 4 வகுப்பறை கட்டடமும், ரூ.1 கோடி மதிப்பீட்டில் காசிராமன் தெரு, பெசன்ட் ரோடு சந்திப்பில் உள்ளூர் வாய்க்கால் மீது சிறுபாலம் மற்றும் தாங்குசுவர் பணிகள் முடிந்தமையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு அவர்கள் திறந்து வைத்து கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட ரூ. 13 கோடி 98 இலட்சம் மதிப்பீட்டிலான ஓலைப்பட்டினம் வாய்க்கால் தூர்வாரி இருபுறமும் கரைகள் பலப்படுத்தும் பணியினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் தாராசுரம் பேரூராட்சியில் ரூ.2.35 கோடி மதிப்பீட்டில் கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 3க்கான அலுவலகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு – 176ல், ஏ.ஜ.எஸ். காலனியில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் மழைநீர் உந்து நிலையத்தை துணை மேயர் மு.மகேஷ்குமார் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வட்டார துணை ஆணையர் அமீத் ஐ.ஏ.எஸ்., மண்டல அலுவலர் சரவணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வே.ஆனந்தம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.